1972 மார்ச் 17]

பாரத் சேவக் சமாஜத்துக்கு முதலமைச்சர் நிதியிலிருந்து நன்கொடை

* 523 வினு—திரு. கே. எ. வகாப் : மாண்புமிகு முதலமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினுக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பாரத் சேவக் சமாஜத்திற்கு முதலமைச்சர் நிதியிலிருந்து நன்கொடை ஏதேனும் அளிக்கப்பட்டுள்ளதா ?

(இ) ஆம் எனில், எவ்வளவு ?

மாண்புகு டாக்டர் மு. கருணுநிதி : (அ) இல்லே.

(இ) இவ்வினு எழவில்லே.

திரு. கே. எ. வகாப் : தலேவரவர்களே, பார்த் சேவக் சமாஜம், அரிசன நல சங்கம், தென் இந்திய முஸ்லீம் சங்கம் ஆகிய பொது நிறுவனங்களிடமிருந்து நிதி உதவி கேட்டு மனு வந்தால், முதலமைச்சர் நிதியிலிருந்து உதவி அளிக்கும் செயற் குறிப்பை முதலமைச்சர் அவர்கள் பரிசீலனே செய்வார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணுநிதி : தீ, வெள்ளம், துப்பாக்கிப் பிரயோகம், தடியடிப் பிரயோகம் இவைகளால் அதிகமாகப் பாதிக்கப்படுபவர் களுக்கும், தொழில் நிறுவனங்களில் எதிர்பாராத அசம்பாவிதங்கள் ஏற்படு கின்ற போதும் முதலமைச்சர் நிதியிலிருந்து உதவி அளிக்கப்படுகின்றது. இது போன்ற தனிப்பட்ட நிறுவனங்களுக்கு முதலமைச்சர் நிதியிலிருந்து உதவி செய்தால், பின் எல்லா நிறுவனங்களிடமிருந்தும் உதவி கோரி மனு வரக் கூடிய நிலேமை ஏற்படும். எனவே, இம்மாதிரி நிறுவனங்களுக்கு உதவி அளிக்க இயலாது.

உயர்நிலேப் பள்ளிகளில் வேளாண்மைப் படிப்பு

* 524. வினு திரு. கா. வேழவேந்தன் : மாண்புமிகு கல்வி-உள்ளாட்சித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினுவுக்கு விடையளிப்பாரா—

எல்லா உயர்நிலேப் பள்ளிகளிலும் அறிவியல் சார்ந்த வேளாண்மைப் படிப்பையும் பாடமாக இணேத்து, வயல்வெளிகளில் மாணவர்க்குப் பயிற்சி அளிக்கும் செயற்குறிப்பு ஏதேனும் அரசின் பரிசீலனேயிலுள்ளதா ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : வேளாண்மைபற்றிய அறிவைப் பாடப் பயிற்சியோடு சேர்த்துப் புகட்ட இப்பொழுதே வசதியுள்ளது. வயல் பயிற்சியைப் பொதுவாக எல்லா மாணவர்களுக்கும் அளிப்பது சாத் தியமாயிராது.

சட்டமன்றப் TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS